www.Padasalai.Net www.CBSEtips.in

THEN CHITTU • FORTNIGHTLY •

# தேன்சிட்டு

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9 வகுப்புகளுக்கான மாதமிருமுறை இதழ்
16-30 செப்டம்பர் 2023
சிட்டு 2 • இதழ் 20
விலை : ரூ. 10/-
சென்னை

16-30 SEPTEMBER 2023
Chittu 2 • Issue 20
Price : Rs. 10/-
Chennai




துள்ளல் இசை

## பெரிய மேளம்

பற்றித் தெரிந்துகொள்ள 17 ஆம் பக்கம் வாங்க...





04 மரத்தின் நண்பர்கள்



10 'தொலைநோக்கி' செய்வோமா?



20 நீச்சல் விளையாட்டு

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in






www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!

# குரங்குக் கூட்டம்!



குரங்குக் கூட்டம் கண்டேனே
குட்டிகளோடு மரத்திலே!

சாட்டைப் போன்ற வாலோடு
கிளைக்குக் கிளைத் தாவுதே!

சேட்டை ரொம்பப் பண்ணுதே
சிரிக்கத்தானே வைக்குதே!

கோபம் வந்தால் போதுமே
கண்ணை மிரட்டிப் பார்க்குதே!

கொடுக்கிறதை உண்ணுது!
கூடி ஒன்றாய் வாழுது
குரங்குக் கூட்டம் கண்டேனே
குட்டிகளோடு மரத்திலே!

– மு.க. இப்ராஹிம்

## உள்ளே...

குளிர்சாதனப் பெட்டி 5
பறவை நண்பன் 8
தட்டான்பூச்சி 16
கேப்டன் அனிதா 18
வெங்கலக் குரல் பாடகர் 21







தேன்சிட்டு
Then Chittu fortnightly
▸ 16 - 30 செப்டம்பர் 2023
▸ சிட்டு 2 • இதழ் 20
▸ 16 - 30 September 2023
▸ Chittu 2 • Issue 20

பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி

அச்சிட்டோர் :
ப. ராஜ்குமார்

அச்சகம் :
ராசி கிராபிக்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
69-7/A,
சிட்கோ தொழிற்பேட்டை,
திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம்,
பின் கோடு - 600 124

பதிப்பகம்:
தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்,
ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
எண் 68, கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006

www.Padasalai.Net www.CBSEtips.in



# மரத்தின் நண்பர்கள்!

அன்று விடுமுறை நாள். நண்பர்கள் நால்வரும் சேர்ந்து ஒரு பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது யாரோ அழும் சத்தம் கேட்டது. பூங்கா முழுக்கத் தேடியும் அழும் மனிதரைப் பார்க்க முடியவில்லை. சோர்ந்துபோய் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்தார்கள். அங்குதான் அழும் சத்தம் அதிகமாகக் கேட்டது.

ஆமாம். அழுதது அந்த மரம்தான்!

"மரமே... மரமே... ஏன் அழுகிறாய்?"

"எனக்கு நண்பர்களே இல்லை. அதனால் என்னோடு விளையாடவும் யாரும் இல்லை" என்று சொன்னது மரம். அதைக் கேட்ட நண்பர்கள், "நாங்கள் உனக்கு நண்பர்களாக இருக்கிறோம். உன்னோடு விளையாடுகிறோம்" என்றனர். ஆனாலும் மரம் அழுகையை நிறுத்தவே இல்லை.

"என்னால் நகரவே முடியாதே... உங்களோடு எப்படி ஓடி ஆடி விளையாட முடியும்?" என்று கேட்டது. அதற்கு நண்பர்களோ, "நீ இங்கேயே இரு... உன்னைச் சுற்றியே நாங்கள் விளையாடுகிறோம்" என்று சொன்னபடியே பந்தை மரத்தின் மீது தூக்கியெறிந்தனர். மரமும் பந்தைத் திருப்பி அனுப்பியது. இப்படியே அவர்கள் விளையாடினார்கள்.

எல்லோரும் சோர்ந்து அமர்ந்தனர். அப்போது ஒருவன், "மரமே, உன் மீது ஏற வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது" என்றான்.

"ஓ! அதுக்கு என்ன... எல்லோருமே ஏறி வாருங்கள்" என்றபடி ஒரு கிளையை வளைத்துக் காட்டியது. நால்வரும் அதில் ஏறி விளையாட்டைத் தொடர்ந்தார்கள்.

– மகேஷ்



ஓவியம் : பா. ஜோதிக்குமார்




சைல்டு லைன் 1098

(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# குளிர்சாதனப் பெட்டி

நம் வீட்டிலும் கடைகளிலும் ஃப்ரிட்ஜ் எனும் குளிர்சாதனப் பெட்டியைப் பார்த்திருப்போம். அது எப்படிச் செயல்படுகிறது என்று தெரியுமா?

ஒரு திரவமானது ஆவியாவதற்கு அதனைச் சுற்றியுள்ள பொருட்களின் வெப்பத்தைப் பயன்படுத்துகிறது. இதன் அடிப்படையில்தான் குளிர்சாதனப் பெட்டி செயல்படுகிறது.


ஆவியாதல் சுழற்சி சரியாகத் தொடர்ந்து இயங்குவதற்கு குளிர்சாதனப் பெட்டியினுள் ஒரு திரவக் குளிர்ப் பதனி (Coolant), ஒரு கம்ப்ரஸர் (Compressor), மின் தேக்கிச் சுருள்கள் (Condenser) மற்றும் விரிவுபடுத்தப்பட்ட வால்வு (Expansion valve) ஆகியவை உள்ளன.

**விரிவுபடுத்தப்பட்ட வால்வு (Expansion valve)**

அந்த நீண்ட குழாய் வழியாகச் செல்லும் குளிர்ப் பதனி, அழுத்தமான (High Pressure Zone) பகுதிக்கு வந்ததும் மீண்டும் திரவமாக மாறும். அழுத்தம் குறைவானதும் (Low Pressure Zone) வாயுவாக மாறும்.

**குளிரூட்டும் பெட்டி (Compartment)**

இப்படி குளிர்ப் பதனியானது திரவமாகவும், வாயுவாகவும் மாறி மாறிப் பயணிக்கும்போது, பெட்டியின் உள்ளே இருக்கும் வெப்பத்தை உள்வாங்கி வெளியே கடத்தும். இந்தத் தொடர் சுழற்சியால், பெட்டிக்குள் இருக்கும் வெப்பம் வெளியேறி, குளிர்விக்கப் படுகிறது.



**வாயு (Vapour)**

குளிரூட்டும் சுழற்சியின் தொடக்க நிலையில் குளிர்ப் பதனியானது வாயு நிலையில் இருக்கும்.

**மின் தேக்கி (Condenser)**

திரவம் பின்னால் இருக்கும் குழாய்களின் வழியே பயணிக்கும்போது, வெப்பம் வெளியே கடத்தப்படும். அது, பெட்டிக்குப் பின்னுள்ள குழாய் வழியாகச் செல்கிறது.

**மின் அழுத்தி (Compressor)**

மின்சக்தியால் கம்ப்ரஸர் இயக்கப்படும் போது, வாயுவை அதிகமாக அழுத்தும். அப்போது இந்த வாயு வெப்பமாகி, திரவமாகிவிடும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




# அடுக்குத்தொடர்

ஒரு சொல் பல முறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர். இரண்டு, மூன்று, நான்கு சொற்கள் வரையிலும் அடுக்கி வரும். தனிச்சொல்லாக நின்றாலும் பொருள் தரக்கூடிய சொல்லாக இருக்கும். ஆனால் ஒரு சொல்லாகத் தனித்து வராது பல பண்புகளை உணர்த்தி நிற்கும்.

சொற்களை அடுக்கிச் சொல்கையில் உணர்ச்சி மேலோங்கி இருப்பதை அடுக்குத்தொடர் காட்டும். விருந்தினரை 'வாங்க' என்கிற ஒற்றை சொல்லில் அழைப்பதை விடவும் 'வாங்க வாங்க' என்னும்போது மகிழ்ச்சியும் உணர்ச்சியும் கூடுகிறது தானே! அடுக்குத்தொடர் உணர்த்தும் பண்புகளைப் பார்ப்போம்.



- **உவகையையும் காட்டி நிற்கும்.**
  உதாரணம் : வாங்க வாங்க, வாழ்க வாழ்க
- **அச்சம் என்னும் பொருளையும் உணர்த்தும்.**
  உதாரணம் : தீ தீ தீ தீ
- **விரைவு என்னும் பொருளை உணர்த்தி வரும்.**
  உதாரணம் : ஓடு ஓடு, போ போ போ
- **வெகுளி (கோபம்) என்னும் பொருளை உணர்த்தி வரும்.**
  உதாரணம்: விடு விடு, உதை உதை
- **அவலம் அதாவது துன்பம் என்னும் பொருளையும் உணர்த்தும்.**
  உதாரணம் : போச்சு போச்சு



சில இடங்களில் இசையை நிறைவு செய்யும் பொருட்டும் அடுக்குத்தொடர் பயின்று வரும். நம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் இறுதியில் 'வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!' என்று முடிவது இசையை நிறைவு செய்யும் பொருட்டே.

பாரதியின் பாடல்கள் பலவற்றில், உணர்வு மிகுதியால் அடுக்குத்தொடர் பயின்று வருவதைப் பார்க்க முடியும்.

'வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே!
வாழ்க வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே!'

இப்படித்தான் மனோன்மணியம் சுந்தரனாரும்

'எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!'

என்று உணர்வுமேம்பட்ட நிலையில் தமிழணங்கே என்று இருமுறை அழைத்தவர், வாழ்த்துதுமே என மும்முறை தமிழன்னையை வாழ்த்துகிறார்.

அடுக்குத்தொடர் பொருளுடைய சொல். அடுத்தடுத்து வரும்போது ஒற்று மிகுந்தும் திரிந்தும் வரும். அதற்கு எடுத்துக்காட்டாக,

பலபல - பற்பல - பலப்பல
வேறு வேறு - வெவ்வேறு
இனிது இனிது - இனிதினிது
மேலும் மேலும் - மென்மேலும்

நான்கு நான்கு - நன்னான்கு போன்ற சொற்களைக் கூறலாம்.

- தி.பரமேசுவரி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# Easy Riddles



1. What has to be broken before you use it?



2. Which month of the year has 28 days?

3. What is full of holes but still holds water?





4. I have branches, but no fruit, trunk or leaves. What am I?

5. It belongs to you, but other people use it more than you do. What is it?




Answers: 1. An egg 2. All of them 3. A sponge 4. A bank 5. Your name

# Word Search Puzzle

**Find the aquatic creatures name hidden in the below grid**



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | S | D | N | C | Q | R | O | M | G |
| F | V | S | A | C | P | O | Y | J | M |
| I | D | D | R | R | E | U | J | J | D |
| S | P | D | W | A | Y | W | K | Z | F |
| H | Z | E | H | B | T | G | Z | U | G |
| L | V | D | A | S | Z | A | O | M | A |
| J | E | L | L | Y | F | I | S | H | E |
| J | O | W | U | S | H | A | R | K | G |
| F | W | H | A | L | E | P | R | U | V |
| O | L | F | O | O | I | I | A | H | I |



Answers 3 page

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பறவை நண்பன்!

**ஓர் ஊரில் இளைஞன் ஒருவன் இருந்தான். ஒரு வேலையும் செய்ய மாட்டான். பயங்கர சோம்பேறி. அவனின் அப்பா, அம்மா எவ்வளவு சொல்லியும் வேலைக்குச் செல்ல மாட்டேன் என்று அடம்பிடித்தான்.**

ஒருநாள் காட்டு வழியே சென்றவன், அழகான சிறிய பறவை ஒன்றைப் பார்த்தான். அதைத் தன் வீட்டில் வைத்து வளர்க்க ஆசைப்பட்டான். அப்பறவையைப் பிடிப்பதற்குள் அது பறந்துவிட்டது.

"ஏய், பறவையே... என்னுடன் வீட்டுக்கு வருவாயா?" என்று கேட்டான்.

"வருகிறேன். ஆனால், எனக்கு ரொம்பப் பசிக்கும். அதனால் நான் கேட்கும்போதெல்லாம் இரை தர வேண்டும்" என்றது அது.

"ஓ! நிச்சயம் தருகிறேன்" என்றதும், அவன் தோளில் வந்து அமர்ந்தது அப்பறவை.

வீட்டுக்கு வந்ததும் அதற்குத் தானியங்களைக் கொடுத்தான். அது கொறித்துக் கொறித்துத் தின்றது. அடுத்த நாள் காலையில் பார்த்தால் அந்தச் சிறிய பறவை கொஞ்சம் வளர்ந்து இருந்தது. அதற்குத் தானியங்கள் வைத்ததும் ஒரே நிமிடத்தில் சாப்பிட்டு விட்டு, மீண்டும் கேட்டது. வீட்டில் இருந்த அனைத்தையும் தின்றும்கூட அதற்குப் பசி அடங்கவில்லை.


அந்த இளைஞன் காட்டுக்குள் சென்று பறவைக்கு இரையைத் தேடி எடுத்து வந்தான். அதற்குள் பறவை இன்னும் பெரிதாக வளர்ந்துவிட்டது. அவன் எடுத்து வந்த இரை எல்லாவற்றையும் உடனே தின்றுவிட்டது. மீண்டும் பசிக்கிறது என்றது அப்பறவை. அவன் அடுத்த ஊருக்குச் சென்று வேலை செய்து கூலியாகத் தானியங்களை வாங்கி வந்தான்.

வீட்டுக்கு வந்து பார்த்தால், அப்பறவை பழையபடி சிறியதாக மாறியிருந்தது. எப்படி என வியந்து பார்த்தான்.

"உன் சோம்பேறித்தனம் போய்விட்டது. உழைக்கத் தொடங்கி விட்டாய். அதனால், நான் பழையபடி மாறிவிட்டேன்" என்றது பறவை.

அதன்பிறகு தினமும் வேலைக்குச் சென்றான் அவன். அப்பறவையையும் காட்டில் விட்டுவிட்டான். அதுவும் சுதந்திரமாகப் பறந்துபோனது.

– லாவண்யா



# A winged friend

**A youth was there in a town. He did not do any work. He was very lazy. He was very adamant that he would not go for any work in spite of his parents repeated advice.**

One day he saw a small beautiful bird on his way to a forest. He liked to grow it in his house. But the bird flew away without getting caught. "O! bird, will you come to my house?", he asked. It said, "I will come. But I feel hungry often; So, you should feed me whenever I ask for". He said "Sure". Then the bird sat on his shoulder.

He fed the bird with grains on reaching home. It pecked at them. The bird grew bigger the next day. It pecked all the grains and asked for more. Its hunger did not get satiated even after eating all the grains available at home.

The youth went to forest and got its food. The bird grew still bigger. It ate all the food collected by him. It said that it was hungry again. He went for a work in a neighbouring town and got grains as salary for his work.

When he reached home the bird became smaller as it was. He was surprised to see this change. "Your laziness is gone now; You have started to work; So, I became as I was", said the bird. Then he went for his work regularly. He left the bird free in the forest.

- Lavanya

Translated by Meenakshi D

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# நீளமான ரயில் பாதை!



**உலகின் மிக நீளமான ரயில் பாதை எது?**

ரஷ்யாவில் உள்ள டிரான்ஸ் சைபீரியன் ரயில் பாதைதான் உலகின் மிக நீளமான ரயில் பாதை. டிரான்ஸ் ரயில் நிலையத்தில் ஒரு ரயில் பயணிக்கத் தொடங்கினால், அது சைபீரியன் சென்று சேர 7 நாட்கள் ஆகும். அந்தப் பாதையில் 16 நதிகள், 3 ஆயிரத்து 901 பாலங்களை அந்த ரயில் 9 ஆயிரத்து 289 கிலோ மீட்டர் தூரம் கடந்து செல்கிறது.

**தானியங்கி விற்பனை இயந்திரம் அதிகமுள்ள நாடு எது?**

தானியங்கி விற்பனை இயந்திரம் அதிகமுள்ள நாடு ஜப்பான். அந்நாட்டில் சுமார் 12 கோடிக்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். அங்கு 23 பேருக்கு ஒரு விற்பனை இயந்திரம் எனும் அளவில் உள்ளன. அவற்றின் வழியாக நூடுல்ஸ், குளிர் பானங்கள் போன்றவையே அதிகளவில் மக்கள் வாங்குகிறார்கள்.



**பூனையின் பின்னங்கால்களில் 4 விரல்கள்தான் தெரியுமா?**

நான்கு கால்கள் உடைய பாலூட்டிகளுக்குக் கால்களில் 5 விரல்கள் இருப்பது போல் பூனைக்கும் முன் கால்களில் 5 விரல்கள்தான். ஆனால், பின்னங்கால்களில் பூனைக்கு 4 விரல்கள் மட்டுமே. காரணம் பூனைகள் பாயும்போதோ, வேகமாக ஓடும்போதோ அவை பின்னங்கால்களை அதிகம் பயன்படுத்துவதில்லை.





**புவியீர்ப்பு விசை 'பூமியில்' ஒரே மாதிரி இருப்பதில்லையாமே?**

ஆம்! பூமியின் சிறப்பம்சங்களில் ஒன்று அதன் புவியீர்ப்பு விசை. ஆனால், இந்தப் புவியீர்ப்பு விசை பூமி முழுவதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அதற்குக் காரணம் பூமி கோளவடிவம் கொண்டது. எனவே, பூமிக்குச் சமமான மேற்பரப்பு கிடையாது.




**கேளுங்கள்!** உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.

முகவரி : அறிவோம் ஆயிரம், 'தேன்சிட்டு' சிறார் இதழ்
8ஆவது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006. மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# ‘தொலைநோக்கி’ செய்வோமா?

வானியலில் ஆர்வமிக்கவரா நீங்கள்? தொலைவில் தெரியும் நிலவினை அருகில் பார்க்க, ஒரு தொலைநோக்கி (Telescope) இல்லையே என எண்ணுகிறீர்களா? நாமே ஏன் ஒரு தொலைநோக்கியைச் செய்யக்கூடாது? அதற்கான வழிகளை நீங்களே தெரிந்து கொள்ளலாம் வாருங்கள்.




**தேவையான பொருட்கள்:**

1. கார்ட்போர்ட் அட்டையால் ஆன குழாய் - 3. இந்த மூன்று குழாய்களும் முறையே 6.8 செ.மீ., 6.4 செ.மீ., 6 செ.மீ. விட்டமும், 30 செ.மீ. நீளமும் இருக்க வேண்டும்.
2. குழி - குவி லென்ஸ் (Concave-Convex lens) - 70 செ.மீ. குவிமையம் (Focal length), 6.7 செ.மீ. விட்டம் உடையது.
4. குழி லென்ஸ் (குழி ஆடி) (Concave lens) - 4 செ.மீ. குவிமையம், 1.8 செ.மீ. விட்டம் உடையது.
5. லென்ஸ்களைப் பொருத்த வட்ட வடிவிலான அட்டை.
6. ஒட்டுவதற்கான பசை.

**செய்முறை:**




மூன்று அட்டை குழாய்களையும் ஒன்றிற்குள் ஒன்றாகப் பொருத்த வேண்டும்.





1.8 செ.மீ. விட்டமுள்ள குழி லென்ஸ் தொலைநோக்கியில் கண் வைத்துப் பார்க்கும் பகுதியில் பயன்படுவது. இந்த லென்சை வட்ட வடிவ லென்ஸ் தாங்கியில் ஒட்ட வேண்டும்.








லென்ஸ் ஒட்டப்பட்ட வட்ட வடிவ அட்டையின் வெளி விளிம்பில் பசை தடவி, குழாயின் குறுகலான வாய்ப் பகுதியில் ஒட்ட வேண்டும். இதுவே தொலைநோக்கியைப் பயன்படுத்தும்போது நம் கண்ணருகில் வரக்கூடிய பகுதி.



பெரிய லென்ஸான குழி - குவி ஆடியின் விளிம்பில் பசை தடவ வேண்டும்.





லென்ஸின் குவிமையப் பகுதி தொலைநோக்கியின் வெளிப்புறம் அமையுமாறு அட்டைக் குழாயின் மற்றொரு வாய்ப் பகுதியில் ஒட்ட வேண்டும். இந்தப் பகுதி, தொலைநோக்கியில் பொருட்களைப் பார்க்கும் பக்கம் இருக்கும்.

நன்றி: arvindguptatoys.com



தாங்கிகள் எதுமில்லாத எளிய தொலைநோக்கி தயார். இதை நீங்கள் உங்கள் கைகளால் கவனமாக ஏந்திக் கொண்டு, தொலைவிலுள்ள பொருட்களைப் பார்க்கப் பயன்படுத்தலாம்.

உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்
மாணவர்களே!
உங்களுக்கு ஏதாவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
... மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?


பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்
நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்
14417

www.Padasalai.Net www.CBSEtips.in




## 1. சவால்

இந்த நான்கு படங்களும் மைக்ரோ லென்ஸ் வழியே எடுக்கப்பட்டவை. இப்படங்களைச் சற்று உற்று நோக்கி, இவை என்ன என்பதைக் கண்டுபிடியுங்கள்.



## 2. கண்டுபிடி

இந்தக் கட்டங்களில் உள்ள வண்ணங்களைக் கவனியுங்கள். இவற்றில் சரியாக நடுவில் உள்ள வண்ணம் எது என்பதை 60 வினாடிகளுக்குள் சொல்லவேண்டும்.



விடைகள் 21ஆம் பக்கம்


## கண் ஜாலம்



இந்தப் படத்தில் ஒரு பிரபலம் மறைந்திருக்கிறார். இவரது மூக்குப் பகுதியில் உள்ள மூன்று புள்ளிகளை 30 வினாடிகள் விடாமல் உற்று நோக்குங்கள். அதன் பின் உடனே ஒரு வெள்ளைச் சுவரையோ அல்லது வெள்ளைக் காகிதத்தையோ பாருங்கள். பளிச்சென்று அவரது உருவத்தைக் கண்டு மகிழுங்கள்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# மாணவர் கலைவண்ணம்



க.நிஷாந்த், 9ஆம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, துறையூர், திருச்சி.




ப.குகன், 9 ஆம் வகுப்பு, அ.ஆ.மே.நி.பள்ளி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி



**எம்.ஜாஸ்னி,** 6ஆம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, பாண்டூர், செங்கல்பட்டு.




**ஆர்.ராகுல்,** 8ஆம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, செவன்வெல்ஸ், சென்னை



**சு.அ. சிவபிரேம்,** 7ஆம் வகுப்பு, அ.உ.நி. பள்ளி, பெத்தநாயக்கனூர், கோயம்புத்தூர்.



**ஜெ.ஜோஷிகா,** 7ஆம் வகுப்பு, ஜெயராம் ஔவையார் அ.மே.நி.பள்ளி, பாவூர்சத்திரம், தென்காசி.



**பா.பிரியதர்ஷினி,** 9ஆம் வகுப்பு, அ.பெ.மே.நி.பள்ளி, பெரியகுளம், தேனி



**அ.திவாஷ்,** 7ஆம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, மழவராயநல்லூர், திருவாரூர்



**சு.கார்த்திகா,** 8ஆம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி.பள்ளி, தாளியாம்பட்டி, குளித்தலை, கரூர்



**எம். ஸ்ரீவித்யா,** 9ஆம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, பசுவனபுரம், ஈரோடு



**க. பிரதிக்ஷா,** 8ஆம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி.பள்ளி, இராமுடையானூர், நாமக்கல்.




**பி.தீனா,** 9ஆம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, சோலூர் கோத்தகிரி, நீலகிரி.




**பரமேஸ்வரன்,** 6ஆம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி.பள்ளி, அக்கிப்புலியூர், நாகப்பட்டினம்

www.Padasalai.Net www.CBSEtips.in






வெ.சூரியபிரகாஷ், 8ஆம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி.பள்ளி, இராமக்கவுண்டன்பட்டி, மதுரை




ஜெ.சந்திரா, 7ஆம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, அரக்கோணம், ராணிப்பேட்டை



கே.அனிஷ்கா, 9ஆம் வகுப்பு, ஸ்ரீ வரதம் அ.ம.மே.நி.பள்ளி, வேணுகோபாலபுரம், கடலூர்



கே. லோகிதா, 6ஆம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, மாமண்டூர், திருவண்ணாமலை.



ஜா.மனிஷா, 8ஆம் வகுப்பு, அ.ந.நி.பள்ளி, கிருஷ்ணன்கோவில், கன்னியாகுமரி.



பா. சண்முகப்பிரியா, 9ஆம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, பெரிய கொல்லப்பட்டி, விருதுநகர்

**மாணவர் கலைவண்ணம்**
பகுதிக்கு வரையுங்கள் மாணவர்களே!

முகவரி : 'மாணவர் கலைவண்ணம்',
**'தேன்சிட்டு' சிறார் இதழ்**
8வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 600 006
மின்னஞ்சல் :
thenchittu@tnschools.gov.in


www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




# எழுத்தாளர் அறிஞர் அண்ணா



'அறிஞர்' என்றதுமே சட்டென்று நம் நினைவுக்கு வருபவர் சி.என். அண்ணாதான். ஆம்! தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர். நாடறிந்த நல்ல பேச்சாளர். சமூக சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்புவதற்காக வீதி வீதியாக அலைந்தவர். அவரின் பேச்சுத் திறமையால் ஈர்க்கப்பட்டு அரசியல் களத்திற்கும் இலக்கியத் தளத்திற்கும் வந்தவர்கள் ஏராளம். தமிழில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தவர் அண்ணா.

1909ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் பிறந்த அண்ணா, போற்றுதலுக்கு உரிய பேச்சாளர் மட்டுமல்ல, சிறந்த எழுத்தாளரும்கூட. இவருக்குச் சிறு வயது முதலே தெருக்கூத்து பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்துவந்தது. ஆதிகாலக் கலைவடிவமான கூத்து நிகழ்ச்சியை இரவெல்லாம் கண் விழித்துப் பார்ப்பார். அதற்காகப் பாட்டி அவரைக் கண்டித்திருக்கிறார். கூத்தில் எழுதப்படும் பாடல்கள், கதைகளின் மீதான ஆர்வம்தான் பின்னாளில் அவரைச் சிறந்த படைப்பாளியாகவும் மாற்றியது. சௌமியன், சமதர்மன், ஒற்றன், பரதன் உள்ளிட்ட பல புனை பெயர்களில் படைப்புகளை எழுதியுள்ளார் அண்ணா.




நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதி தமிழ் இலக்கியத்தில் தனி இடம் பிடித்தார். அதுமட்டுமல்லாமல், கவிதை, கட்டுரை, கடிதங்கள், நாவல்கள், நாடகங்கள் என அண்ணா எழுதிய படைப்புகளின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டும்.

அறிஞர் அண்ணா எழுதிய 'வீட்டுக்கு ஒரு புத்தகச்சாலை' என்கிற கட்டுரை 9-ஆம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் இடம்பெற்றுள்ளது.

இவரின் நாவல்களில் தசாவதாரம், ரங்கோன் ராதா, கலிங்கராணி ஆகியவை புகழ்பெற்றவை. நாடகங்களில், வேலைக்காரி, சந்திரோதயம், சந்திரமோகன் உள்ளிட்டவை பரவலான வரவேற்பைப் பெற்றவை. இவர் எழுதிய 'ஓர் இரவு' எனும் நாடகம் அதே பெயரில் திரைப்படமாகவும் வெளிவந்து வெற்றி பெற்றது.

அறிஞர் அண்ணாவின் ஆட்சியின்போது மேற்கொண்ட சிறப்பான நடவடிக்கைகளால் இன்றும் போற்றப்படுவதுபோல, அவரின் எழுத்துகளும் என்றென்றும் அவரின் புகழை உரக்கச் சொல்லிக்கொண்டே இருக்கும்.

- மகேஷ்


---

# புதிய வரலாற்றை எழுதியவர்



அமெரிக்காவில் 1969ஆம் ஆண்டு மார்கட் லீ ஷெட்டர்லே (Margot Lee Shetterly) என்பவர் கறுப்பினக் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தந்தை, விண்வெளி ஆய்வு மையமான நாசாவில் வேலை செய்தார். மார்கட் லீக்கு விண்வெளி தொடர்பான வேலை செய்ய விருப்பம் இல்லை. வங்கி, பத்திரிகை, சுற்றுலா துறை எனப் பல்வேறு வேலைகளில் இருந்தார். பல்வேறு நாடுகளில் பணியாற்றினார்.

2010ஆம் ஆண்டு தன் பெற்றோரைச் சந்திக்க கணவருடன் சென்றார் மார்கட் லீ. அப்போது, நாசா விண்வெளி ஆய்வு மையப் பணியிலிருந்து தந்தை ஓய்வு பெற்றிருந்தார். நாசாவில் பணியாற்றிய கறுப்பினப் பெண்கள் பற்றி அவர் சொன்ன தகவல்கள் மார்கட் லீக்குப் புதியதாக இருந்தன. 1945ஆம் ஆண்டு தொடங்கி நடைபெற்ற போருக்காக ஆண்கள் சென்றுவிட்டனர். அதனால், நிறைய பெண்களுக்கு நாசாவில் வேலை அளிக்கப்பட்டது. அவர்களை கம்ப்யூட்டர் என்றே அழைப்பார்களாம். அவர்கள் இன்றி, நாசா இயங்காது என்கிற அளவுக்குப் பணியாற்றினார்கள்.





இந்த வரலாற்றை மற்றவர்களுக்கும் சொல்வதற்கு ஆசைப்பட்டார் மார்கட் லீ. கம்ப்யூட்டராக இருந்த கறுப்பினப் பெண்கள் ஒவ்வொருவரையும் தேடித் தேடிச் சென்று பேசினார். அவற்றைத் தொகுத்து எழுதி 'ஹிட்டன் ஃபிகர்ஸ்' (Hidden Figures) என்கிற நூலாக வெளியிட்டார். அது, அமெரிக்காவில் அதிகளவு விற்பனையானது. பெரியவர்களுக்கான அந்த நூலை எளிமையானதாக மாற்றி அதே பெயரில் சிறுவர் நூலாக வெளியிட்டார். பின்னாளில் அந்நூல் திரைப்படமாகவும் (Hidden Figures) வெளிவந்தது.

- சிந்தன்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# ஈரோடு மாவட்டம்









**ஈரோடு மாவட்டம் என இன்று நாம் அடையாளப்படுத்தும் பகுதி முற்காலத்தில் சேர நாட்டின் அங்கமாக இருந்தது. பிறகு, சோழர்கள், பாண்டியர்கள், களப்பிரர்கள், விஜயநகரப் பேரரசு ஆகியவற்றின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. நீண்ட நெடிய வரலாறு உடைய இந்த மாவட்டத்தில் 18ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்கியபோது அதற்கு எதிராக இங்கிருந்த பாளையக்காரர்கள் கிளர்ச்சியில் இறங்கினர். இவர்களில் தீரன் சின்னமலை குறிப்பிடத்தகுந்தவர்.**

பெருந்துறை, பொள்ளாச்சி, அரவக்குறிச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பட்டக்காரர்கள் பலரை ஒன்றிணைத்த அவர் கோயம்புத்தூரில் நிலைகொண்டிருந்த ஆங்கிலேயப் படையினர்மீது 1800ஆம் ஆண்டு தாக்குதல் தொடுத்தார். ஆனால், அதில் அவர் வெற்றியடையவில்லை. அதன்பின், மறைந்திருந்து திடீர்த் தாக்குதல் நடத்தும் உத்தியைக் கடைப்பிடித்து ஆங்கிலேயரை அச்சுறுத்தி வந்தார்.

நீண்ட போராட்டத்திற்குப் பிறகு தீரன் சின்னமலையைப் பிடித்த ஆங்கிலேயர் 1805ஆம் ஆண்டு சங்ககிரிக்கோட்டையில் தூக்கிலிட்டனர். அதன்பின், ஈரோடும் ஏனைய கொங்குப் பகுதிகளும் ஆங்கிலேயர் வசமாயின.

- கோயம்புத்தூர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த ஈரோட்டைத் தலைநகராகக் கொண்டு 1979ஆம் ஆண்டு தனி மாவட்டம் பிறந்தது.

### ஆளுமைகள்

திருப்பூர் குமரன், பெண்ணுரிமைச் செயற்பாட்டாளரான நாகம்மை, கணிதமேதை ராமானுஜம், ஈ.வெ.கி. சம்பத், தமிழின் முதல் நவீனக் கலைக் களஞ்சியத்தைத் தொகுத்த பெரியசாமித் தூரன், புலவர் குழந்தை, சூழலியலாளரும் மருத்துவருமான வெ. ஜீவானந்தம், ஈரோடு தமிழன்பன், உச்ச நீதிமன்ற மேனாள் நீதிபதி ப. சதாசிவம், பத்மஸ்ரீ விருதுபெற்ற தொழிலதிபர் எஸ்.கே.எம். மயிலானந்தன்.



பெ.தூரன்


- கேரளாவில் உருவாகும் பவானி ஆறும், கர்நாடகாவில் ஊற்றெடுக்கும் காவிரியும் இம்மாவட்டத்தைச் செழிக்கச் செய்கின்றன. இவ்விரு ஆறுகளும் கூடுதுறையில் ஒன்றாகக் கலக்கின்றன.
- கொடிவேரி, பவானிசாகர் அணைகள் மூலமும், கிளையாறுகள் வழியேயும் கிடைக்கும் நீரைக்கொண்டு இங்கு, நெல், வாழை, கரும்பு, மஞ்சள், தென்னை, பருத்தி ஆகிய பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.
- பவானியில் தயாராகும் படுக்கை விரிப்புகள் (Bedsheets) உலகப் புகழ்பெற்றவை. இங்கு, கைத்தறி, விசைத்தறிகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் துணிகள் உலகெங்கும் ஏற்றுமதியாகின்றன.
- இந்திய அரசியலில் மிக முக்கிய பங்காற்றிய சுயமரியாதைக்கென ஓர் இயக்கத்தைக் கட்டியெழுப்பி ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இனத்தவரின் விடுதலைக்குப் பாடுபட்ட பெரியார் ஈ.வெ. இராமசாமி ஈரோட்டைச் சேர்ந்தவர்தான். இவர் பகுத்தறிவு, இறைமறுப்பு, ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, பெண்களுக்குச் சொத்துரிமை, சீர்திருத்தத் திருமணம், மொழிச் சீர்திருத்தம் என எண்ணற்ற தளங்களில் போராடி வெற்றிக்கனியை எட்டியவர்.
- ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி, பெருந்துறை, பவானி, அந்தியூர், கோபிச்செட்டிப்பாளையம், நம்பியூர், சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி ஆகிய வட்டங்களாக இந்த மாவட்டம் பிரிக்கப்பட்டுள்ளது.
- எட்டு சட்டமன்றத் தொகுதிகளை இம்மாவட்டம் கொண்டுள்ளது.
- சென்னிமலை அருள்மிகு வேலாயுதசாமி திருக்கோயில், பண்ணாரியம்மன் திருக்கோயில், பவானி சங்கமேஸ்வரர் கோயில், சேக் அலாவுதீன் தர்கா, வெள்ளோடு ஆதிநாதர் சமணக்கோயில் உள்ளிட்ட எண்ணற்ற வழிபாட்டு இடங்கள் இந்த மாவட்டத்தில் அமைந்துள்ளன.
- தீரன் சின்னமலை நினைவு மண்டபம், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா நினைவகங்கள் ஆகியவை நம் முன்னோரின் கடந்த கால போராட்டங்களை அறிய உதவுகின்றன.
- இங்குள்ள வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வகைவகைப் பறவைகளைக் காணலாம்.

– சரவணன் பார்த்தசாரதி

www.Padasalai.Net www.CBSEtips.in




# தட்டான்பூச்சி



**தட்டான்பூச்சி பற்றி சில சுவையான தகவல்களைப் பார்ப்போம்.**

- தட்டான்பூச்சிகள் ஒரு விநாடிக்கு 30 முறை தன்னுடைய இறக்கைகளை மேலும் கீழும் அடித்துக்கொண்டே இருக்கும். தன்னுடைய இறக்கைகளை அடிக்கடி தட்டிக்கொண்டே இருப்பதால், இதற்குத் தட்டான்பூச்சி என்னும் பெயர் வந்தது எனச் சொல்லப்படுகிறது.
- தட்டான்பூச்சிகளுக்குத் தனித்தனியாக 4 இறக்கைகள் உள்ளன. இதன்மூலம் மணிக்கு 30 - 35 கி.மீ. வேகத்தில் பறக்க முடியும். தட்டான்பூச்சி தன் தலையைத் திருப்பாமலேயே பின்னால் பறக்கும்.
- உலக அளவில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட தட்டான்பூச்சி வகைகள் உள்ளன. அவற்றில் இந்தியாவில் மட்டும் 503 வகையான தட்டான்பூச்சிகள் உள்ளன.
- தட்டான்பூச்சி என்பது பொதுவான சொல். இதனைத் தும்பி என்றும் அழைப்பர். இதில் தட்டான் (Dragonflies) மற்றும் ஊசித்தட்டான் (Damselflies) ஆகிய இரண்டு வகையான தட்டான்பூச்சிகள் உள்ளன.
- தட்டான்பூச்சியின் உடலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை தலை, மார்பு, வயிறு ஆகும். தட்டான்பூச்சிகள் பூச்சி வகையைச் சார்ந்த முதுகெலும்பில்லாத உயிரினம்.
- தட்டான்பூச்சிக்கு இரண்டு கூட்டுக் கண்கள் தலைப்பகுதியில் உள்ளன. எனவே, தலையைத் தட்டான்பூச்சிகள் எப்படி வேண்டுமானாலும் திருப்பிப் பார்க்க முடியும்.



ஊசித்தட்டான்

- தட்டான்பூச்சிகளுக்கு ஆறு கால்கள் உள்ளன. ஆனால், இவற்றால் நடக்க முடியாது.
- தட்டான்பூச்சி நம்மைக் கடிக்காது.
- இவை பெரும்பாலும் ஏரி, குளம், கண்மாய், குட்டை போன்ற நீர்நிலைகளிலும், அதனை ஒட்டிய பகுதிகளிலும் வாழும். தட்டான்பூச்சிகளின் மூலம் அந்த இடத்தில் உள்ள நீரின் தன்மையை நாம் அறியலாம்.
- தட்டான்பூச்சிகள் பறக்கும்போதே எதிரிகளிடம் சண்டையிடும். மற்றும் வேட்டையாடி, உணவு உண்ணும் திறன் பெற்றவை.
- ஈக்கள், கொசுக்கள், சிறு மீன்கள், தேனீக்கள் போன்ற உயிரினங்களைத் தட்டான்பூச்சிகள் உணவாக உண்ணும். இதனால் இயற்கையில் இந்த உயிர்களின் எண்ணிக்கை சமன்படுத்தப்படும்.
- தட்டான்பூச்சி ஒரு நாளைக்கு 100-200 கொசுக்கள் வரை உண்ணும்.
- தட்டான்பூச்சிகளின் இறக்கைகளில் உள்ள வண்ணங்கள் சூரிய ஒளி பட்டவுடன் மின்னுகின்றன.
- பெண் தட்டான்பூச்சிகள் ஒருமுறை 1000 - 1500 முட்டைகள் வரை நீரின் மேற்பரப்பில் இடும்.
- தட்டான்பூச்சிகள் பொதுவாக 8 - 10 வாரங்கள் உயிர்வாழும்.

இனிமேல் தட்டான்பூச்சிகளைக் கைகளில் பிடிக்காது, கண்டு ரசிக்கப் பழகுவோம்!

- கட்டுரை, படங்கள் : ரா. துரைபாபு

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பெரிய மேளம்

திருவிழா, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் தவில் மேளம் இசைப்பதைப் பார்த்திருப்பீர்கள். பெரிய மேளம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அது பெரிய அளவுள்ள மேளம். அதைத் தூக்கிக்கொண்டு இசைக்கலைஞர் வாசிப்பதைக் கேட்கவும் பார்க்கவும் அற்புதமாக இருக்கும்.

பெரிய மேளம் என்படும் தோல் கருவி முதன்மையாக இடம் பெறுவதால் இக்கலை பெரிய மேளம் என்று அழைக்கப்படுகிறது. பெரிய மேளத்தின் எடை மட்டுமே சுமார் 10 கிலோகிராம் இருக்கும். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இது பரவலாக வாசிக்கப்படுகிறது.

கோவில் திருவிழாக்கள், மாநாடு போன்ற பெரிய விழாக்களில் இக்கலையை நிகழ்த்துவார்கள். பெரிய மேளக் குழுவில் இடம் பெறுபவர்கள் குறித்துப் பார்க்கலாம்.

## குழுவின் எண்ணிக்கை : ஏழு பேர்

இசைக்கருவிகள் : ஆறு: தமரு, சட்டி, தமுக்கு, ஜால்ரா, மேளசெட், பெரிய மேளம்.

பெரிய மேளத்தில் பத்து அடி முறைகள் உள்ளன. அந்த அடி முறைகளைப் 'பாகம்' என்று கூறுகின்றனர். இதற்கு பாகம் என்று தனியாக எதுவும் இல்லை மாறாக இசைக் கலைஞர்கள் குறிப்பிடும் தாளத்தைக் கொண்டும் பழக்கத்தின் அடிப்படையில் அடிப்பார் அடி வகை மாற்றும்போது அதற்கேற்ப இசைக்கருவிகளின் இசை மாறுபடும். பெரிய மேளத்தை வாசிக்கும்போது ஒவ்வொரு அடிக்குமுள்ள தாளத்தை வேறுபடுத்திக் காட்டுவார்கள்.

முதல் பாகத்தில் நிகழ்த்தக்கூடிய பத்து ஆட்டங்களின் முன்னோடியே 'முதலடி' என்று கூறலாம்.
இரண்டாவது பாகம் பொதுவாகவே எல்லா விழாக்களிலும் அடிக்கக்கூடிய அடி.
திருமண நிகழ்ச்சிக்கு இசைப்பது மூன்றாவது பாகம்.
கங்கையம்மனுக்குக் கூழ் வார்க்கும்போது இசைக்கக்கூடிய அடி நான்காம் பாகம்.
திரைப்படப் பாடல்களுக்குரிய அடி ஐந்தாம் பாகம்.
மாரியம்மனுக்குக் கூழ் வார்க்கும்போது அடிக்கப்படுவது ஆறாம் பாகம்.
பொங்கல் அன்று நிகழ்த்தக்கூடிய மேளத்திற்கு ஏழாம் பாகம்.
புலியாட்டத்திற்கு அடிக்கக்கூடிய மேளத்திற்கு எட்டாம் பாகம். இதனை 'ஜடலடி' என்றும் கூறுவர்.
ஒன்பதாவது பாகம் பொதுவாக அனைத்துக் கோவில் விழாக் காலங்களில் இசைக்கக்கூடியவை.
ஊரில் யாராவது இறந்தால் சலங்கை கட்டி ஆடி பெரிய மேளத்தில் சாவு அடியை நிகழ்த்தும்போது ஊரே கூடிவிடும். இது பத்தாவது பாகம். இது தற்போது நடைமுறையில் அதிகம் இல்லை.

நன்றி : தமிழ் இணையக் கல்விக் கழகம்

கலைஞர்கள் காலில் சலங்கையைக் கட்டிக்கொண்டிருப்பர். அவர்கள் இசைக்கருவிகளை வைத்து இசைத்துக்கொண்டு ஆடும்போது சலங்கையின் இசையும் கூடுதலாக ஒலிக்கும்.



www.Padasalai.Net www.CBSEtips.in



இதழ் 20




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in






நன்றி : http://www.storyweaver.org.in/

www.Padasalai.Net www.CBSEtips.in



# நீச்சல் விளையாட்டு



மனிதன் தன் தேவைக்காகவும் நீர்நிலைகளைக் கடக்கவும் நீச்சல் பயிற்சி பெறுகிறான். பழங்காலத்தில் இருந்தே எகிப்தியர்களுக்கு நீரில் நீச்சல் அடிக்கும் பழக்கம் இருந்ததைக் கற்கால ஓவியங்கள் சொல்கின்றன. வாழ்வின் ஓர் அங்கமாக இருந்த நீச்சல் பயிற்சி, தற்போது விளையாட்டாக மாறிவிட்டது.

## நீச்சல் விளையாட்டின் வரலாறு

- 1837ஆம் ஆண்டு லண்டனில் நீச்சல் விளையாட்டுக்கான அமைப்பு (Swimming Organisation) தொடங்கப்பட்டது. ஆனால், அப்போது போட்டிகள் நடத்தப்படவில்லை.
- 1846ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில்தான் முதல் நீச்சல் போட்டி நடத்தப்பட்டது.
- 1896ஆம் ஆண்டு நவீன ஒலிம்பிக் போட்டி தொடங்கிய போது அந்தப் பட்டியலில் நீச்சலும் இருந்தது. ஆண்கள் மட்டுமே அதில் பங்கேற்க முடியும்.
- 1908ஆம் ஆண்டு வரை ஒலிம்பிக்கின் நீச்சல் போட்டிகள் கடல், ஆறு போன்ற திறந்தவெளி நீர்நிலைகளில் நடத்தப் பட்டன. பின்னாளில்தான் அரங்கத்தில் நடைபெறும் நீச்சல் போட்டிகள் நடைமுறைக்கு வந்தன.
- 1912ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்கில் பெண்களுக்கான நீச்சல் போட்டி நடத்தப்பட்டது.
- இரண்டாம் உலகப் போருக்குப் பின் நிகழ்ந்த தொழில்நுட்ப வளர்ச்சியால் நீச்சல் பயிற்சியில் பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. நீச்சலுக்கு ஏற்ற உடை வடிவமைக்கப்பட்டது.

## நீச்சல் போட்டிகள்

ஃப்ரீஸ்டைல் (Free-style), பேக்ஸ்ட்ரோக் (Backstroke), ப்ரெஸ்ட்ஸ்ட்ரோக் (Breaststroke), பட்டர்ஃப்ளை (Butter-fly), மெட்லி (Medley), ரிலே (Relay) என வெவ்வேறு வகையான நீச்சல் போட்டிகள் நடத்தப்படுகின்றன. உடல் அசைவு முறை, தூரம் போன்றவற்றைக் கணக்கில் கொண்டு போட்டிகள் பிரிக்கப்படுகின்றன.

50, 100, 200, 400, 800, 1500 மீட்டர்கள் என்ற அளவில் முறையே சாதாரண நீச்சல் போட்டிகள் நடைபெறும். இவை அல்லாமல் திறந்த நீர்நிலைகளில் 10 கிலோ மீட்டர் தூரத்துக்கு நடத்தப்படும் மாரத்தான் நீச்சல் போட்டியும் உள்ளது.

## நீச்சலில் இந்தியா

பெண்கள் பிரிவில் ரிச்சா மிஷ்ரா, மானா படேல், ஷிகா டேண்டன் போன்றோர் மிகப் பிரபலமானவர்கள்.

ஆண்கள் பிரிவில் ஸ்ரீஹரி நடராஜ், சந்தீப் செஜ்வால், சஜன் பிரகாஷ் போன்றோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

மாரத்தான் நீச்சல் போட்டிகளில் தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்தவர் குற்றாலீஸ்வரன். சேதுகால்வாய் உள்பட 6 கால்வாய்களை நீந்திக் கடந்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தார். இளம் வயதில் (14 வயது) அர்ஜுனா விருதை வென்ற நீச்சல் வீரர் என்ற சாதனையையும் படைத்தார்.

ஆசியக் கோப்பையில் இந்தியாவுக்கு முதன் முதலில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத் தந்த பெருமை குற்றாலீஸ்வரனையே சாரும்.

இந்திய வீரர் சச்சின் நாக் 100 மீட்டர் ஃப்ரீஸ்டைல் பிரிவில் இச்சாதனையை நிகழ்த்தினார்.







குற்றாலீஸ்வரன்



சச்சின் நாக்



ரிச்சா மிஷ்ரா




ஸ்ரீஹரி நடராஜ்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# வெங்கலக் குரல் பாடகர்



அந்தச் சிறுவனுக்குப் பாடுவது என்றால் மிகவும் பிடிக்கும். விடியற்காலையில் எழுந்து பஜனைப் பாடல்கள் பாடுபவரோடு பாடுவான். பள்ளியிலும் அச்சமின்றி எல்லார் முன்னும் பாடுவான். ஒருமுறை அந்த ஊருக்கு தந்தை பெரியார் வந்தபோது, இவனை மேடையில் பாடச் சொன்னார்கள். சிறிதும் பயப்படாமல் கணீரென்று பாடினான். அதைக் கேட்டு அந்தச் சிறுவனை மனதார பாராட்டினார் பெரியார்.



அவன் பள்ளிப் படிப்பை முடித்த நேரத்தில் நாடகம் பார்க்கச் சென்றான். அங்கிருந்தவர்கள் அவனைப் பாடச் சொன்னார்கள். இவனும் அப்போது பிரபலமாக இருந்த பாடல் ஒன்றைப் பாடினான். அதைக் கேட்டுப் பாராட்டியவர்கள் இவனுக்கு நாடகக் குழுவில் நடிக்கும் வாய்ப்பையும் வழங்கினார்கள்.

அவர் இளைஞரானதும், சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் குழுவில் சேர்ந்தார். இரவு பகல் பாராமல் பாடிப் பயிற்சி எடுத்தார். ஒருநாள் இரவு நாடகக் கொட்டகையின் பின்புறம் பாடிப் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தபோது, சலசல எனச் சத்தம் கேட்டது. அதைச் சட்டை செய்யாமல் பாடல் பயிற்சியிலேயே கவனமாக இருந்தார். மறுநாள்தான் தெரிந்தது, அவர் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகில் பாம்புகள் ஊர்ந்து சென்றன என்பது. பாடலில் மூழ்கிவிட்டால் தன்னையே மறந்துவிடுவார்.



கொஞ்ச காலத்திற்குப் பின் சென்னைக்கு வந்து தமிழ் இசைக் கல்லூரியில் படித்தார். அந்த ஆண்டு நடந்த தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று 'இசைமணி' என்ற பட்டத்தைப் பெற்றார். இவ்வளவு பெருமைக்கும் உரியவர் யார் தெரியுமா?

சீர்காழி எஸ். கோவிந்தராஜன்தான். தமிழ் இசை உலகம் இன்றும் கொண்டாடிவரும் அற்புதமான பாடகர். திரைப்படப் பாடல்கள், பக்திப் பாடல்கள் எனத் தன் தனித்த வெங்கலக் குரலால் இசை வரலாற்றில் நீங்கா இடம்பிடித்தவர் இவர். பத்மஸ்ரீ, கலைமாமணி, சங்கீத வித்வான் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.



## 7ஆம் பக்கத்திற்கான விடைகள்

**Word Search Puzzle**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | S | D | N | C | Q | R | O | M | G |
| F | V | S | A | C | P | O | Y | J | M |
| I | D | D | R | R | E | U | J | J | D |
| S | P | D | W | A | Y | W | K | Z | F |
| H | Z | E | H | B | T | C | Z | U | G |
| L | V | D | A | S | Z | A | O | M | A |
| J | E | L | L | Y | F | I | S | H | E |
| J | O | W | U | S | H | A | R | K | C |
| F | W | H | A | L | E | P | R | U | V |
| O | L | F | O | O | I | I | A | H | I |

## 11ஆம் பக்கத்திற்கான விடைகள்

### சவால்




படம் 1 - காளான்

படம் 2 - மனிதன் விழி (கண் பாப்பா)

படம் 3 - சீரகம். ஆமாம். சமையலுக்குப் பயன்படும் சீரகமே தான்.

படம் 4 - தீக்குச்சிகள்

## கண்டுபிடி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# ஆலமரம்



நமது நாட்டில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை அனைத்துப் பகுதிகளிலும் வளரக்கூடிய மரமாக ஆலமரம் உள்ளது.

- ஆலமரம் 250 ஆண்டுகள் பழமையான மரமாகும். 19ஆம் நூற்றாண்டிற்கு முன் எழுதப்பட்ட பல பயணக் கட்டுரைகளில் ஆலமரம் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன.
- மாவீரர் அலெக்சாண்டர் முதன் முதலில் இந்தியாவிற்குள் நுழைந்த போது ஆலமரத்தைப் பார்த்து வியந்து நின்றதாகக் கூறப்படுகிறது.
- இந்தியாவில் பல ஆண்டுகளுக்கு முன்னர் வணிகர்கள் கூடுமிடமாகவும், ஓய்வு எடுக்கும் இடமாகவும் ஆலமரம் இருந்துள்ளது. ஆலமரத்திற்கு ஆங்கிலத்தில் Banyan என்று பெயர். ஆங்கிலேயர் காலத்தில் வியாபாரிகள் (Banyans) கூடுவதால் அம்மரத்தை இப்பெயர் கொண்டு அழைத்தனர்.
- இந்தியாவில் அதிக மழை பெய்யும் மாநிலங்களான அசாம் மற்றும் வங்காளத்தில் ஆலமரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.
- அத்தி மரக் குடும்பத்தைச் சேர்ந்த ஆலமரமானது அக்குடும்பத்தின் அனைத்து குணாதிசயங்களையும் பெற்றுள்ளது. உதாரணமாக, ஆலமரம் வளரத் தொடங்கியதும் அப்பகுதி மண்ணின் அனைத்துவித ஊட்டச்சத்துகளையும் பயன்படுத்துகிறது.



சீனாவில் உள்ள ஹாங்காங் நகரில் கட்டப்படும் பெரிய கட்டடங்களை உறுதிப்படுத்தவும், இடிந்துவிடாமல் பாதுகாக்கவும் கட்டடங்களைக் கட்டுவதற்கு முன்பே அவ்விடங்களில் ஆலமரம் வளர்க்கப்படுகிறது. ஆலமர வேர்கள் ஒன்றோடு ஒன்று பிணைந்து கட்டடத்தைப் பாதுகாக்கிறது என்று கூறுகிறார்கள்.

- கொல்கத்தாவின் ஹவுராவில் உள்ள ஆச்சார்யா ஜெகதீஷ் சந்திரபோஸ் தாவரவியல் பூங்காவில் உலகின் மிகப்பெரிய ஆலமரம் அமைந்துள்ளது.
- ஆலமரத்தின் இலை, தண்டு, கனி தொடங்கி வேர், பால் ஆகியவை என அனைத்தும் மருத்துவ குணம் கொண்டவை.
- சித்த மருத்துவத்திலும் மருந்தாக ஆலமரத்தின் பகுதிகள் பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றன.
- ஆல மரங்களில் இருந்து தொங்கும் விழுதுகள் மண்ணில் ஊன்றி மரத்தைத் தாங்குகின்றன. மரத்தின் மையப்பகுதி சேதமடைந்தாலும், விழுதுகள் முழுமையாக மரத்தைத் தாங்கி நிற்கும்.
- பரந்து விரிந்து வளர்ந்திருக்கும் ஆலமரத்தில் அனைத்து விதமான பறவைகளும் வாழ்கின்றன. மேலும் பறவைகளுக்குச் சுவையான கனியைத் தருகிறது ஆலமரம்.
- குளிர்ப் பிரதேசங்களில் வளரக்கூடிய ஆலமரம் முழுமையாக வளர்ச்சி அடைவதில்லை. அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாநிலத்தில் உள்ள ஆலமரங்களில் பூக்கள் மட்டுமே பூக்கின்றன.
- ஆலமரத்தின் இலைகள் 4-8 அங்குல நீளமும், 3-6 அங்குல அகலமும் கொண்டு பார்ப்பதற்குப் பெரியவையாகவும் உள்ளன. மேலும் அவை தடிமனாகவும் தோல் போலவும் இருக்கும்.

– தேவி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




# வட்டார அளவிலான போட்டிகளில் அரசுப் பள்ளி மாணவர்கள் அசத்தல்!

தமிழ்நாடு முழுவதும் அண்மையில் நடைபெற்ற வட்டார அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அரசுப் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டனர். ஓட்டப்பந்தயம், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், கோகோ, கால்பந்து என பல்வேறு பிரிவுகளில் அதிக அளவில் **அரசுப் பள்ளி மாணவர்களே முதலிடம்** பிடித்துள்ளனர்.



இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் அனைவரும் அடுத்தகட்டமாக மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.




Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in



Posted between 16-20 September 2023

# செப்டம்பர் 2023

## பிறந்த நாட்கள்




16

தமிழில் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் கி. ராஜநாராயணன் பிறந்த நாள். இவரின் 'கோபல்ல புரத்து மக்கள்' எனும் நாவலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்.




16

புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி எம்.எஸ். சுப்புலட்சுமி பிறந்த நாள். இவரின் இசைச் சேவைக்காக 1998 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது அளிக்கப்பட்டது.



17

பெரியார் என்று போற்றப்படும் ஈ.வெ. ராமசாமி பிறந்த நாள். பெண் அடிமைக்கு எதிராகவும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் தீவிரமாகச் செயல்பட்டவர். 94 வயது வரை சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கும் பணியில் தன்னைக் கரைத்துக் கொண்டவர்.



19

உலகப் புகழ் பெற்ற அறிஞர் பாவ்லோ ஃப்ரெய்ர் பிறந்த நாள். பிரேசில் நாட்டைச் சேர்ந்த இவர் எழுதிய கல்வி குறித்த நூல்களே இன்றும் உலகம் முழுவதும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதாக உள்ளன.



19

அமெரிக்க விண்வெளி வீராங்கனையும் கப்பல்படை அதிகாரியுமான சுனிதா வில்லியம்ஸ் பிறந்த நாள். இவர் விண்வெளியில் 195 நாட்கள் இருந்த பெருமைக்கு உரியவர்.

2023

SEPTEMBER

## நிகழ்வுகள்

### உலக ஓசோன் பாதுகாப்பு தினம் செப். 16



சூரியனின் புற ஊதாக் கதிர்கள் ஏற்படுத்தும் பாதிப்புகளில் இருந்து பூமியில் வாழும் உயிரினங்களைப் பாதுகாப்பது ஓசோன் படலம் ஆகும். இதன் முக்கியத்துவத்தையும், இதைப் பாதுகாப்பது குறித்த அவசியத்தையும் எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கம்.

### உலக நோயாளி பாதுகாப்பு தினம் செப். 17



உலகளாவிய ரீதியில் நோயாளிகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்நாள் கடைபிடிக்கப் படுகிறது. 2019 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற 72-ஆவது உலக சுகாதார பேரவையில் உலக நோயாளர் பாதுகாப்பு தினம் கொண்டுவரப்பட்டது.

### சர்வதேச அமைதி தினம் செப். 21



உலகம் முழுவதும் அமைதியை நிலைநாட்டி, போர்ச் சூழல் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்பதே இந்த நாளின் முக்கிய நோக்கமாகும். மனித சமூகம் அமைதியான முறையில் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக ஐ.நா. உறுப்பு நாடுகளின் ஒட்டுமொத்த ஆதரவுடன் இந்நாள் கொண்டுவரப்பட்டது.

### உலக இதய தினம் செப். 29



சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் பாதிக்கக்கூடியதாக இதய நோய் உள்ளது.

இதய நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் செப்டம்பர் 29-ஆம் தேதி உலக இதய தினமாக அனுசரிக்கப்படுகிறது.

உங்களுக்கு தேன்சிட்டு இதழ் பிடித்திருக்கிறதா? நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்

முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு ... சென்னை - 6

மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com